In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.157/2021 | Prosecution witness P.W.6 |
| Name: Ruthra Devi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 19-11-2024.

**(Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது செட்டிநாயக்கன்பட்டியில் வசிக்கிறேன். நான் சிலுவத்தூர் பிரைமரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நர்சாக வேலை பார்க்கிறேன். 10.01.2019 ம் தேதி இரவு 7.45 மணிக்கு ஒரு ஆட்டோவில் ஒரு நபர் மயக்கமான நிலையில் இருந்தார். அவரை இன்னொரு நபர் கூட்டி வந்தார். நான் அவரை வந்து பார்த்தபோது அவருக்கு முதுகில் இருந்து அதிக இரத்தம் வெளியேறியது. அதை நான் பார்த்துவிட்டு எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் கொடுக்க முடியாது, திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோகும்படி சொன்னேன். அன்றைய தினம் ஆட்டோவில் வந்தவர்களை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என சாட்சியிடம் கேட்கப்பட்டு ஆஜரில் இருந்த அசா2 ஐ நீதிமன்றத்தில் நிறுத்தி அசா6 இடம் கேட்டபோது அசா2 அன்றைய தினம் சிலுவத்தூர் மருத்துவமனைக்கு ஆட்டோவில் வந்தவர்தான் என சாட்சியம் அளிக்கிறார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

பொதுவாக ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகளை பார்வையிட்டவுடன் எதில் பதிவு செய்வோம் என்றால் Out patient Nominal Register ல் பதிவு செய்வோம். காயம்பட்டு வந்தவர் சம்மந்தமாக பதிவு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்சுக்கு நான் எதுவும் போன் செய்தேனா என்றால் இரத்தப்போக்கு அதிகமாக இருந்ததாலும் 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு நேரமாகும் என்பதாலும்

உடனே கொண்டுபோகும்படி சொல்லிவிட்டேன். சிலுவத்தூரில் 108 ஆம்புலன்ஸ் வசதி எதுவும் கிடையாது. அசா2 மட்டும்தான் காயம்பட்ட நபரை கூட்டி வந்தார் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.19 17:56:43 +0530

Principal District Judge,
Dindigul.